# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு தமிழ் நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் தலைமையில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் நடைப்பெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் வாரியத் தலைவர் திரு. ஆர். முருகையா பாண்டியன், அரசு செயலர் திரு தங்ககலியப்பெருமாள், மேலாண்மை இயக்குநர் திரு கே. செல்லமுத்து மற்றும் வாரிய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆய்வு கூட்டத்தில் **2011 – 12** முதல் **2013 – 14** முடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ் நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மீதான தற்போதைய நிலை, மேலும் செயல்படுத்தப்படவுள்ள முக்கிய திட்டங்கள், வருவாய் வசூல், விற்பனை பத்திரம் வழங்கப்பட்ட விவரங்கள் ஆகியவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட முக்கிய திட்டங்களான சென்னை – பெங்களூர் நெடுஞ்சாலையில் உள்ள திருமழிசையில் **311.05** ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் **2160** கோடி மதிப்பீட்டில் **12,000** அடுக்குமாடி குடியிருப்புகளுடன் கூடிய துணைக்கோள் நகரம் அமைக்கும் திட்டத்தை ஆய்வு செய்தார். மேலும் மதுரை திருநெல்வேலி நான்குவழி பாதையில் தோப்பூர் மற்றும் உச்சப்பட்டி கிராமங்களில் **586.86** ஏக்கர் நிலப்பரப்பில் ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம், சோழிங்கநல்லூரில் முன்கட்டுமான தொழில் நுட்பத்துடன் ரூபாய் **612** கோடி மதிப்பீட்டில் சுயநிதி திட்டத்தின் கீழ் **1500** பன்னடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஆகிய திட்டப்பணிகளின் தற்போதைய நிலையினை ஆய்வு செய்தார். மேலும் தற்போது நடைப்பெற்று வரும் திட்டங்களின் விவரங்களையும் மற்றும் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளில் நடந்து வரும் சிறப்பு பராமரிப்பு பணிகள் விவரங்களையும் ஆய்வு செய்தார்.

அரசாணை நிலை எண் **215** வீ.வ.(ம) ந.பு.வ.துறை நாள் **28.09.2012**ன் படி **4949** ஒதுக்கீடுதாரர்களுக்கும், அரசாணை நிலை எண் **115** வீ.வ.(ம) ந.பு.வ.துறை நாள் **31.05.2013**ன் படி கடந்த மாதம் வரை **676** ஒதுக்கீடுதார்களுக்கும் வட்டி சலுகை பயன்பெறும் வகையில் விற்பனை பத்திரம் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து கோட்ட அலுவலகங்கள் வாயிலாக வழங்கப்பட்டது. இன்றய கூட்டத்தின்போது சுமார் **100** ஒதுக்கீடு தாரர்களுக்கு அமைச்சர் தன் கரங்களால் விற்பனை பத்திரங்கள் வழங்கினார். இதில் ஜெ.ஜெ. நகர் கோட்டத்தில் **70** ஒதுக்கீடுதாரர்களும், அண்ணா நகர் கோட்டத்தில் **16** ஒதுக்கீடுதாரர்களும், கே.கே.நகர் கோட்டத்தில் **9**

ஒதுக்கீடுதாரர்களும் மற்றும் பெசன்ட்நகர் கோட்டத்தில் 5 ஒதுக்கீடுதாரர்களும் பயன்பெற்றனர்.

திருமழிசையில் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் வாரிய திட்டம் செயல்படுத்த இசைவுதெரிவித்து அரசு அறிவித்துள்ள சிறப்பு சலுகையின்படி கூடுதல் இழப்பீட்டுத்தொகையை எந்தவித எதிர்ப்பும் இன்றி தாமாகவே முன்வந்து பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்த முன்னால் நில உரிமையாளர் திரு சகாதேவன் அவர்களுக்கு கூடுதல் இழப்பீடு, கருணைத் தொகை மற்றும் வட்டித் தொகை ஆகியவை சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ரூபாய் 46,47,649 வழங்கப்பட்டது. மேற்கண்ட முன்னால் நில உரிமையாளரை முன்மாதிரியாக கொண்டு இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்த மேலும் பல முன்னால் நில உரிமையாளர்கள் தாமாக முன்வந்து கூடுதல் இழப்பீட்டு தொகை கோரி வந்தால் அதனை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

முடிவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் விரைவில் செயலுக்கு கொண்டு வரவும், நடைப்பெற்று வரும் பணிகளை துரிதமாக முடிக்கவும், வாரிய நிலங்களின் மீதான நீதிமன்ற வழக்குகளை விரைவில் முடிக்கவும் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9